உ
சிவமயம்



அமரர்

# திருமதி.மனோன்மணி அம்மா சண்முகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்


20.05.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலேசியா சிலாங்கூரை பிறப்பிடமாகவும், வவுனியா வெளிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்.

# திருமதி.மனோன்மணி அம்மா சண்முகம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்

# 20.05.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இறுதிவரை எம்முடன் இருந்து ~ எம்
நெஞ்சங்களையும் நினைவுகளையும்
நிரப்பி எம் வாழ்வில் நீங்காத
நிழலாக நிற்கின்ற எம்
ஆருயிர் தெய்வமே
என்றென்றும் நீங்கள்
எம் உள்ளங்களில் உறைந்தாலும்
உங்களுக்கு எம் அன்புக்
காணிக்கையாக இம்மலரினை
தங்கள் பாதங்களில்
***சமர்ப்பிக்கின்றோம்.***

இங்ஙனம்
**கணவர், சகோதர்கள்,**
**மைத்துனர், மைத்துனிகள்,**
**பேரப்பிள்ளைகள்,**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில்

1921
02
18



விண்ணில்

2010
04
20

## அமரர்

# திருமதி.மனோன்மணி அம்மா சண்முகம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

விகிர்தி வருடம் சித்திரை தன்னில்
பூர்வ பக்க சப்தமி புக்குலவ நன்றாக
செவ்வாயில் புண்ணியம் புரிந்தவர் தான் நன்கு
இவ்வுலகை விட்டுச் சென்றாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனுமாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

## திருவாசகம்

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன் உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்போடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாத் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பழவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கழமுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திரு வேரகத்தின் முருகோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். மனோன்மணி அம்மா சண்முகம்

அவர்களின்

# வாழ்வுச் சரித்திரத்தின் வண்ணமிகு வடிவங்கள்

*நில வளமும், நீர்வளமும் நிரம்பப் பெற்ற கவின் உறை நிலம் தென்மராட்சி மா, பலா, தென்னஞ்சோலைகள் அதன் செல்வச் செழிப்புக்கு ஆதாரமாய் திகழ்கின்றன. இப்பிரதேசத்தின் வடபால் அமைந்துள்ள கிராமம் கொடிகாமம். கொடிகாமம் எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர்களான தாமர்வேதவனம், சீதேவி அம்மை அவர்களினது மகன் கந்தையா அவர்களுக்கும் யாழ் வடமராட்சிப் பிரிவில் உள்ள கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர்களான கணபதிப்பிள்ளை, பத்தினியம்மா அவர்களின் புத்திரி அமரர். இலட்சுமி அம்மா அவர்களுக்கும் 18.02.1921 மலேசியாவில் "சிலாங்கூர்" எனும் இடத்தில் முதற் பிள்ளையாக அமரர் மனோன்மணி அம்மா அவதரித்தார்.*

*அமரர் மனோன்மணி அம்மாள் அவர்களுக் 4 சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு.*

*i. அமரர் V.K. நடராஜா (சிங்கப்பூர் புகையிரதப்பகுதி)*
*ii. அமரர் V.K. தியாகராஜா (மலேசியா புகையிரதப் பகுதி)*
*iii. அமரர் V.K. நாகராஜா (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் வவுனியா)*
*iv. திரு V.K. தருமராஜா (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் வித்தியானந்தா முள்ளியவளை)*
*v. திருமதி. T. வடிவாம்பிகை*
*vi. அமரர் S. கனகராஜா (உடன் பிறவா சகோதரர் - சுவிஸ்)*

*அன்னாரின் அன்பிற்குரிய மைத்துனர், மைத்துனி அவர்களுடன்*

*i. அமரர் இலட்சுமிப்பிள்ளை (சிங்கப்பூர்)*
*ii. நா. தங்கத்திரவியம் (வவுனியா)*
*iii. இ. தங்கராஜா (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் புதுக்குடியிருப்பு)*
*iv. த. அன்னபூரணம் (யாழ்ப்பாணம்)*
*v. க. மனோ (சுவிஸ்) இவர்களுடன் என்றுமே மகிழ்ச்சியாக வாழ்ந்தவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தையார் அமரர் வேதவனம் கந்தையா அவர்கள் 1910ம் ஆண்டு மலேசியாவுக்கு உத்தியோக நிமிர்த்தம் சென்று 1919ம் ஆண்டு மீண்டும் இலங்கை வந்து அமரர் இலட்சுமி அம்மாவை திருமணம் செய்து மீண்டும் மலேசியா சென்று. 35 ஆண்டுகளாக புகையிரத தங்கு நிலைய அதிபராக கடமை புரிந்தார். மீண்டும் 1946ல் தன் குடும்பத்தோடு இலங்கை வந்து கரவெட்டி கிழக்கு கரவெட்டியில் வாழ்ந்து வந்தார். தந்தையார் 1965ஆம் தாயார் 1977ஆம் காலமானார்கள்.

அமரர் மனோன்மணி அம்மா தந்தையார் 1946ல் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்று மலேசியாவில் இருந்து இலங்கை வரும்போது உடன் வந்து கரவெட்டி கிழக்கில் வாழ்ந்து வந்தார்.

1948ல் தமது உறவினரான கரவெட்டியை சேர்ந்த அமரர் சிதம்பரப்பிள்ளை, அமரர் சின்னாச்சி அவர்களின் ஏக புத்திரர் ஆசிரியரான ஸ்ரீ சண்முகம் அவர்களை விவாகம் செய்து "மனைத்தக்க மாண்புடையவள் ஆகத்தற் கொண்டான். வனத்தக்கான் வாழ்க்கைத் துணை" எனும் வள்ளுவரின் குறளுக்கு இணங்க வாழ்க்கை நடாத்தி வந்தார்.

அன்னார் திருமணம் செய்து கணவருடன் பாணந்துறை, கொழும்பு போன்ற இடங்களில் நீண்ட காலம் வசித்து வந்தார். குறிப்பாக அவர்கள் கொழும்பில் இருந்த காலத்தில் அவர் கணவர் "கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ் வித்தியாலய" அதிபராக கடமையாற்றி தமிழ்த்துறையிலும் சமயத்துறையிலும் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்.

அன்னார் தனது சகோதரர்களில் மிகுந்த பாசம் கொண்டவர். மூத்த சகோதரராகையால் இளையசகோதரர்க்கு தாய்போல அவர்களை அரவணைத்து பாசம் காட்டி, தூக்கி வளர்த்து போதுமென்று தானோ, என்னவோ ஆண்டவன் அவர்களுக்கு மழலைச் செல்வத்தைக் கொடுக்க வில்லை. இதையிட்டு அன்னாரோ, அவரது கணவரோ என்றுமே வருந்தியது கிடையாது.

தனது சகோதரியின் பிள்ளைகள் இருவரையும் தம்மக்கள் என்று அன்னார் அடிக்கடி கூறுவார். தங்களின் கடைசி காலத்திற்கு கடவுள் தங்களிற்கு இரு பிள்ளைகளை தந்துள்ளார் என சொல்லி மகிழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவுடன் தான் தூக்கிய மகன் இன்று டாக்டராகி தனக்கு வைத்தியம் செய்வதாகச் சொல்லி பெருமைப்படுவார். குறிப்பாக மகள் வாணியை சிறுபிராயம் தொட்டு வளர்த்து மணமேடை ஏற்றி விவாகம் செய்யும் வரை சீராட்டி, பாராட்டி தங்களது வாரிசாக அவரைக் கருதி அன்னாரும், அவர் கணவரும் பெருமையுடன் வளர்த்து வந்தார்கள். அந்தப் பெருமை அன்னாரிற்கும் அவர் தம் அன்புக் கணவருக்குமே என்றும் சாரும்.

1982ம் ஆண்டு அன்னார் தனது கணவர் கொழும்பில் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் முள்ளியவளையில் சகோதரி வடிவாம்பிகை மைத்துனர் தங்கராஜா ஆகியோருடன் சேர்ந்து வசித்து வந்தார். அவ்வேளையில் அன்னாரின் இளைய சகோதரர் V.K. தருமராஜா அவர்கள் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் கடமையாற்றி கொண்டிருந்த காரணத்தால் அவர் குடும்பமும் அங்கேயே இருந்தது "குடும்பம் ஓர் கோயில்" என எண்ணி எல்லோருடனும் சந்தோஷமாக வாழ்ந்தார்.

1992ல் மைத்துனர் தங்கராஜா அவர்கள் வேலையில் இருந்து ஓய்வு பெற்று புதுக்குடியிருப்பில் சேவை அடிப்படையில் கடமைபுரியும் காலத்தில் அன்னார், கணவர், சகோதரி, பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் சென்று "கொக்குவில்" பகுதியில் வசித்து வந்தார்.

இக்காலப்பகுதியில் மகன் முகுந்தன் யாழ் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, கல்வியை தொடங்கிய வேளை, மகள் வாணி மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவ்விரு நிகழ்வுகளும் அன்னாரிற்கு மிகுந்த சந்தோஷம் அளித்தன.

1995ல் வவுனியாவில் உறவினர் வீட்டில் வசித்து வரும் காலத்தில் வவுனியா கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய அன்னாரது சகோதரர் அமரர் V.K. நாகராஜா அவர்களது ஆலோசனைப்படி தனது கணவருக்கு சொந்தமான காணியில் மைத்துனர் தங்கராஜா அவர்களால் கட்டப்பட்ட வீட்டில் 1997ம் ஆண்டு புதுமனை புகுந்தார். அங்கு வாழும் காலத்தில் 2001ம் ஆண்டு மகள் வாணியின் திருமணம் கொழும்பில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரும் கணவரும் கொழும்பு சென்று வாணியை வாழ்த்தி சிறப்பித்தனர்.

மகன் முகுந்தனின் விவாகம் 2004ல் வவுனியாவில் நடைபெற்றபோது மணமக்களை வாழ்த்தி சந்தோஷத்தில் திழைத்தனர். அன்னார் தனது சகோதரர்களின் பிள்ளைகளான சுபாங்கினி, சுகுமார், ஸ்ரீபாமா கொலின், ஸ்ரீபாணு முரளிதரன், எழில்குமரன், கிருத்திகா ஆகியோரை மிகவும் பாசத்துடன் நேசித்து வந்தார். அதேபோன்று தனது மகள் வாணியின் கணவர் முருகுசெழியன், மகன் முகுந்தனின் மனைவி சுதர்சினி, பிரணவப்பிரியா, எழில்குமரன் ஆகியோருடன் மிகுந்த பாசத்துடன் பழகி வந்தார்.

பேரக்குழந்தைகளாகிய ஆயகி, அட்சரன், நேத்திரன், டியூக்ஷன், வினிக்ஷன், ரிஷிவர்மன், அபயா ஆகியோரின் வளர்ச்சியையும், மழலைச் சொற்களையும் கேட்டு அகம் மகிழ்வார். பேரக்குழந்தைகள் அன்னாரை "அக்கா பாட்டி" என அன்போடு அழைக்கும் போது, சிரித்து மகிழ்வார். அன்னார் தனது மைத்துனர் தங்கராஜா சுகயீனமுற்று கொழும்பு சென்று வைத்தியம் செய்யும் காலத்தில் மிகவும் கவலையுற்று அடிக்கடி தொலைபேசி மூலம் சுகம் விசாரிப்பார். "தமக்கு உதவி இல்லாவிடினும் பரவாயில்லை பப்பாவை கவனமாக பார்த்துக்கொள், அவரிற்கு விரும்பியதை செய்து கொடு" என்று தங்கைக்கு அடிக்கடி கூறுவார். ஆனால் கடைசியில் "நீ எப்போது வருவாய்? என" தங்கையிடம் கேட்பதை மட்டும் மறப்பதில்லை.

அன்னார் திடமான உள்ளமும் நிதானமான செயலும் எதையும் ஆராய்ந்து செய்யும் திறனும்படைத்தவர். குலதெய்வமான "யார்க்கருவை" தினமும் உள்ளத்தால் நினைத்து வணங்குவதை வழமையாக கொண்டு இருந்தார். வேண்டிய நேரத்தில் வேண்டியவர்களுக்கு தேவையான உதவியை செய்து கொடுப்பார். தங்களிடம் வரும் உறவினர்களையும், விருந்தினரையும் உபசரிப்பதில் மிகவும் சிறந்தவர். சகலரும் போற்றும் விதமாக அன்னார் வாழ்ந்து வரும் காலத்தில், எதிர்பாராத விதமாக முழங்காலில் ஏற்பட்ட ஒரு சிறு வெடிப்பு காரணமாக வவுனியா அரசினர் வைத்தியசாலையில் 08.04.2010 அன்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு ஐந்து நாட்கள் இருந்தார். பின் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ள வேண்டி இருந்ததால் அம்புலன்ஸில் கொழும்பு அரசினர் வைத்திய சாலைக்கு தனது சகோதரியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கே அன்னாரது மகன் Dr.முகுந்தன் சகல ஒழுங்குகளையும் செய்வித்து வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்றார். 14.04.2010 அன்று அன்னாரிற்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சத்திர சிகிச்சையின் பின்னர் அன்னார் எதுவித சிரமமுமின்றி சுகமாக இருந்தார். 19.04.2010 அன்று கையடக்க தொலைபேசி மூலம் வைத்தியசாலையிலிருந்து தனது கணவருடனும் மகள் வாணியுடனும் உரையாடினார். 20.04.2010 பி.பகல் 4.00மணி போல் மகன் முகுந்தன் அருகிலிருக்க திடீரென இரத்த ஓட்டம் தடைப்பட்டது மகன் முகுந்தன் அவசரசிகிச்சை பிரிவுக்கு கொண்டு சென்று செயற்கைசுவாசம் கொடுக்க முயன்றும் எதுவித பலனுமளிக்கவில்லை. எப்போதும் அவர் அருகிலிருந்த "அருமைக்கிளி" அவர் ஆன்மா பிரிந்து கொண்டிருந்த பொழுதுதான் அங்கு செல்லமுடிந்தது.

" அழுதாலும் தொழுதாலும் விழுந்து
புரண்டாலும் எதிலும் நமக்கு என்று அளந்த அளவுகோல்
ஒன்று உண்டு."

அன்னாரின் ஆன்மா இப்பூவுலகையும் அவர் உயிரினும் மேலாக நேசித்த அன்பு உள்ளங்களையும் விட்டு மாலை 5.20 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். 20.04.2010 அன்று இரவு கொழும்பில் இருந்து அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்திற்கு காலை 7.00 மணி அளவில் கொண்டுவரப்பட்டது. 21.04.2010 மாலை 5.00 மணியளவில் அவரது பூதவுடல் அன்னாரது தாயார், சகோதரர், உற்றார், உறவினர் சங்கமித்த வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. அன்னாரது அன்புக் கணவரும் அருமைத் தம்பி தருமராஜாவும் நெஞ்சைப்பிளக்கும் வேதனையோடு இறுதி ஈமக்கிரியைகளினை நிறைவேற்றி வைத்தார்கள். வெளிக்குளம் இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தீயில் சங்கமம் ஆனது.

"பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
இயற்கையின் நியதி.
துஞ்சியவர் வாழ்வில் துயரங்கள் நீங்கி.
இன்பமுடன் விண்ணுலகில் இனிதே நீர் வீற்றிருக்க
இறைவன் பாதம் என்றும் இறைஞ்சுவோம் நாமே"

**ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சுவடுகள் நிழற்படமாக



அமரர்களாகிய தந்தை தாயார்



தந்தையார் சேவையிலிருந்து ஓய்வு பெற்று இலங்கை திரும்பும்போது
1946 இல் மலேசியாவில் பெற்றோரும் அன்னாரும் அவர்தம் உடன்பிறப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லற வாழ்க்கையில் 25 ஆண்டு வெள்ளி விழாவின்
போது கொழும்பில் 1973



இல்லற வாழ்க்கையில் 50ஆவது பொன்விழாவின் போது
வவுனியாவில் 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லற வாழ்க்கையில் 60 ஆவது வருட வைரவிழாவின்
போது வவுனியாவில் 2008 இல்



மகள் வாணியுடனும் கனவருடனும் கொக்குவிலில்
1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் திருமதி மனோண்மணி அம்மாள் சண்முகம் அவர்களது ஆன்மா வீடுபேறடையத் திருவருள் நல்க என்று விநாயகப் பெருமானை உள்ளன்புடன் வேண்டுதல் செய்தல்.**

"ஐங்கரத் தண்ணலே" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"ஞானக் கொழுந்தே" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"வேழ முகத்தானே" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"ஆகு வாகனா" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.

"கருணை பூக்கும் கணபதிப் பெருமானே" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"ஆத்திசூடி அமர்ந்த தேவ" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை போற்றினோம்" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரா" எனது மனைவிக்கு வீடு பேறு அறித்தருள்க.
"கண்ணுதலே" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.

"முத்தளக் கூவிளம் சாத்தி வணங்கினோம்" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
"பொன்னுமிகும் கல்விமிகும் சொல்லி வணங்கினோம்" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
" கற்றவர் நோற்றவர் கற்பகத்தின் பேறு பெற்றவரைப் போல " எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
" பெருஞ் செல்வம் நல்கும் பிரானே" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.
" துங்கக் கரிமுகத்துத் தூமணியே " எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.

" தும்பிகையானைத் தொழுது வணங்கினோம்" எனது மனைவிக்கு வீடு பேறு அளித்தருள்க.
" கூ கூ கணபதி கூ கூ எனக் கூ கூ என்ற குன்றே சரணம் என்றோம்" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.
" அன்பு நிறைந்த வாரண முகவா" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.
" திணைப்புனத்தில் தம்பிக்கு உதவிய அண்ணனே என்றோம்" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.
" நீங்காகருணை நிமலா என்றோம்" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க.
" ஏரம்பா என்று வணங்கினோம்" எனது மனைவிக்க வீடு பேறு அளித்தருள்க

**கணவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மனைவி தொடர்பான எனது மனம் நீங்கா நினைவலைகள்

- "அன்பும் அமுதமும்" பொருந்த வாழ்ந்தோம்.
- பண்பாக வாழ்ந்தோம்.
- ஏழைகளுக்கு உதவினோம்.
- கல்வியை இயன்றவரை ஏனையவர்க்கும் கொடுத்து உதவினோம்.
- அறம் வழி நின்று இல்லறத்தில் ஒழுகி வந்தோம்.
- சொன்ன சொற் தவறாது நடந்தோம்.
- உண்மை வழி நின்று இல்லறம் புரிந்தோம்.
- தந்தை, தாய், உற்றார், உறவினர் போற்ற வாழ்ந்தோம்.
- நடு நிலமை வகித்து நடந்தோம்.
- மனட்சாட்சியுடன் நடந்தோம்.
- "சான்றோர் பழிக்கும் வினை" செய்தறியோம்.
- "கதி இழக்கினும்" சொன்ன சொல் தவறமாட்டோம்.
- அறிவற்றவர் ஏசினும் அதனை பொருட்படுத்த மாட்டோம்.
- சினேகிதர்களை விட்டுபிரித்தறியோம்.
- இன் சொல் இயம்பினோம்.
- உயிர்களுக்கு இரங்கினோம்.
- தேவர் குறள்களைப் போற்றி நடந்தோம்.
- மூவர் தமிழை ஓதி வந்தோம்.
- பிறவிப் பெருங்கடல் நீந்த இறைவனை தொழுது வந்தோம்.

உம் பிரிவால் வாடும்
**கணவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியா வெளிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய திரு ஊஞ்சல் பதிகத்தில் அன்னாரின் கணவர் க.சி சண்முகம், அதிபர் பாலபண்டிதர் அவர்களினால்**

## இயற்றப்பட்டுச் சேர்க்கப்பட்ட பாடல்கள்

### எச்சரிக்கை

*வெளிக்குளக் கூழாவடி வேழமுகா எச்சரிக்கை*
*களிப்பருளும் ஞானஜ் கணபதி எச்சரிக்கை*
*தளி தன்னில் வீற்றிருக்கும் தலைவா எச்சரிக்கை*
*ஒளிதரும் ஏரம்ப ஓங்கார எச்சரிக்கை*
*வேலற்குத் தினைப்புலத்தில் வேழமானாய் எச்சரிக்கை*
*மாலவனின் பாம்புருவை மாற்றினாய் எச்சரிக்கை*
*சீலமே கூடும் சிவசுதனே எச்சரிக்கை*

### பராக்கு

*வெளிக்குளக் கூழாவடி வேந்தே பராக்கு*
*வெளியிலும் காட்சி தரும் வேந்தே பராக்கு*
*தளியிலே தகு பூசை சார்ந்தாய் பராக்கு*
*தெளிவிலே தேசிகனாய்த் தெரிவாய் பராக்கு*
*ஒளியிலே தோன்றி ஒளிர்வாய் பராக்கு*
*வளி சேர் வான வாரணன் பராக்கு*
*கனி சேர் வரம் தரும் கண்ணே பராக்கு*
*குளிர்தரும் கூழாவடிக் குகனண்ணா பராக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

சந்திரற்குச் சாபமிட்டாய் லாலி லாலி
சங்கரன் தேர் அச்சுறுத்தாய் லாலி லாலி
சந்தமும் நினைக்க வைத்தாய் லாலி லாலி
சண்முகற்கு அண்ணாவோ லாலி லாலி
முந்தை வினை யொழிப்பாய் லாலி லாலி
முதம் நிறைக்கும் மூர்த்தியே லாலி லாலி
சிந்தை தனிலுறைவாய் லாலி லாலி
சூழாவடிச் பொருளே லாலி லாலி

## மங்களம்

வெளிக்குளத்துப் பெம்மானுக்கு மங்களம் - நல்ல
சூழாவடிப் பொருட்கு மங்களம்
களி கூரும் கண்ணுதற்கு மங்களம் - காணும்
இன்பமுகற்கு இயம்பி நின்றோம் மங்களம்
தளியுறையும் தந்திமுகா மங்களம் - சிந்தையில்
தங்கும் தலைவருக்கு மங்களம்
எளிதான காட்சிக்கு மங்களம் - எங்கள்
நினைவினிலே இடங் கொண்டாய் மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறப்புக்களின் தவிப்பு

"மூவிரு உடன் பிறப்பில் மூத்தவளாய் நீ யுதித்தாய்
முத்தான மூதுரைகள் சொல்லி வழி காட்டி நின்றாய்
வித்தாகி எங்கள் விழுதெல்லாம் நீயாகி
நித்தமும் எமக்கெனவே வாழ்ந்து எங்கள் அக்கா
சித்தம் கலங்கிக் கதறியழ வைத்ததுமேன்?
பித்து பிடித்தவர் போல் பேதலிக்க வைத்துவிட்டாய்
நந்தா விளக்கே எம் நாயகியே அக்காவே
சிந்தும் விழிநீரை காணிக்கையாக்கிடுவோம்!

அறுவராய் உடன் பிறந்து
மூவரை நாமிழந்து
துடித்த துடிப்பெல்லாம்
நீயறிவாய் அக்காவே
துடித்துப் பதை பதைத்து
ஏங்கியழ வைத்து விட்டு அவ்வழியே போன நெறி
எவ்வகையில் முறைம்மா.!

**ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**கிளி, தருமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியிடம் போன பெரிய மாமிக்கு.....

உங்கள் இல்லாமையை
ஏற்றுக் கொள்ள எங்கள் இதயத்திற்கு
இயலாதிருக்கிறது

அன்றொருநாள்,
திடிரென்று தொலைபேசி வழிவந்தது
உங்கள் மரணச் செய்தி
இப்போதெல்லாம்
தொலைபேசி மணி எங்கடித்தாலும்
மரணத்தின் ஒலியாகவே
கேட்கிறது எங்களுக்கு
உங்கள் கைகள்
ஹார்மோனியம் வாசிக்குமாம்
கம்பளிச்சட்டை பின்னுமாம்
அடிக்கடி அப்பா சொல்லுவார்

சின்ன வயசில்,
உங்கள் நீண்ட கூந்தலை
பின்னிப் பார்ப்பதில்
கொள்ளைப் பிரியம் எனக்கு .......!
மரணதினத்தன்று
உங்கள் தலைக்கு
எண்ணெய் தடவிய தருணத்தில்
ஏனோ அந்த நினைவு
அடி நெஞ்சில் அலை மோத
அடக்க முடியாமல் அழுகை வந்தது.
வட்டவடிவாய்
நீங்கள் சுடும் ரொட்டிக்கு
அண்ணாவும், நானும் எப்போதும் அடிமை
செத்த வீட்டில்
வாய்கரிசி போட்ட வேளை அதை
நினைத்து பாாத்த போது ஏனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சாம் வலித்தது
நம் சடங்குகள் எல்லாமே
துக்கத்தை ஏனோ இன்னும்
எக்கச்சக்கமாக்கிவிடுகின்றன

முன்பொரு நாள்,
நாங்கள் எல்லோரும்
ஒன்றாய் சேர்ந்தமர்ந்து
நிலவொளியில் கூடிக் கதைத்து
பிரிய மறுத்து பிரிந்த
பொற்காலம் ஒன்றிருந்தது - இன்று
அந்த மண்ணும் இல்லை மாமி.
நீங்களும் எம்முடன் இல்லை
பெரிய மாமி என்று சொன்னவாயை
பிரேதம் எனச்சொல்ல வைத்த
மரணம் தந்த வலியைவிட
கொடியதில்லை வேறெந்த வலியும்.
உங்கள் ஒரே தங்கை கிளிமாமியும்,
தும்பி தம்பி எங்கள் அப்பாவும்
பேசிப் பேசி மாய்கின்றனர்.
அவர்களுக்கு ஆறுதல் சொல்லவாவது - ஒருதரம்
வந்து போகும் வரம்
வாங்கி வரக்கூடாதா மாமி?
உறவுகளின் மரணத்தில்
உடைந்து போகாமலிருக்க
இடிதாங்கி போல எங்கள்
இதயங்களில் உறுதி வேண்டும்

மாமி!
உங்கள் ஆன்மா நன்றாய்
சாந்தியடைய கடவுளின் கருணை வேண்டும்

ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிரியமுடன்
**த.கிருத்திகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோன்மணி அக்கா!

நீங்கள்..........
எங்கள் பெரியையாவின் மூத்தமகள்.
பெரியையா எங்கள் குடும்பங்களுக்குகெல்லாம்
பெரிய ஐயாவாகவே வாழ்ந்தார்.
அவருடைய சாயல் உங்களிடமே இருந்தது.

சாயல் மட்டுமல்ல,
பெரியையாவின் பழக்க வழக்கம், பண்பு, ஒழுங்கு,
குணாம்சம்
எல்லாம் நிறையவே உங்களிடம் இருந்தது...............
கற்றும், கேட்டும், அறிவும், வயதும் முதிரும்
இந்த நாள்களிலே தான் பெரியையாவின் அருமை
எங்களுக்குத் தெரிகிறது.

அக்கா!
நீங்கள் எங்கள் பெரியம்மாவின் மகனைத்
திருமணம் செய்தீர்கள்.
எனக்கு ஒருவயதாக இருக்கும்போது,
உங்கள் திருமணம் நடந்தது.
தந்தை வழியாலும் தாய் வழியாலும்
மாற்றமுடியாத, மாறமுடியாத
உறவுப் பிணைப்பு உங்களுக்கும், எங்களுக்கும்
இருந்தது.............

அக்கா!
மூத்தண்ணா! இந்தஉறவுப்பரிமாற்றச்
சொல்லாடலை, எங்களைத் தவிர யாரும்
கையாண்டிருக்க முடியாது.
அக்கா மூத்தண்ணா இருவருக்கும்
எந்தையும் தயாயும்
குஞ்சியப்புவும், குஞ்சியாத்தையும் தான்

அக்கா!
நீங்கள் அதிகம் பேசமாட்டீர்கள்
ஆனால்
பேசுவதைச் சரியாகவே பேசுவீர்கள்.
உங்களுடைய 'கைவண்ணம்'
நீங்கள் பரிமாறும் உணவுகளிலே தெரியும்
அதை நிறையவே அனுபவித்தவர்கள் நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கொழும்பில் இருக்கும் போது,
நண்பர்களுடன் உங்களிடம் வருவேன்.
உங்கள் விருந்தோம்பலையும், உணவின் ருசியையும்
அவர்கள் வாய்விட்டுப்பாராட்டியமை
இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது.
மூத்தண்ணாவுக்கு சத்திரசிகிச்சைக்காக வந்து
திருநெல்வேலியில் எங்களுடன் பல நாட்கள்
தங்கி இருந்தீர்கள்.
அன்பும் அரவணைப்பும் மேலும் இறுக்கமடைந்த
நாட்கள் அவை.

எனது பிள்ளைகளுக்கு மூத்தண்ணா
தேவாரம் சொல்லிக்கொடுத்தார்.
இன்னும் "அப்ப முப்பழம் பெரியப்பா பெரியம்மா" என்று
தான் அவர்கள் அழைப்பார்கள்.
நீங்கள் கொக்குவிலில் இருந்த நாள்கள்
பெரும்பாலும் ஒவ்வொரு நாளும்
குடும்பத்துடன் உங்களிடம் வருவேன்
அதனால் உறவு, அன்பு, பாசம் மேலும், மேலும்
நெருக்கமானது.
நீங்கள் வவுனியா சென்றதும்
தொலைபேசியிலே தொடர்பு கொள்வேன்
உங்கள் குரல் இன்னும் எதிரொலிக்கிறது.
எனது உயர்வைக் கண்டு மகிழ்ந்த, பாராட்டிய அந்தக்
குரலை இனி எந்தப்பிறவியிலே
கேட்கப்பபோகிறேன்.

உங்களை பிரிந்து "துணைபிரிந்த அன்றிலாய்"
வாடும் மூத்தண்ணாவுக்கு எப்படி ஆறுதல் கூறுவேன்.
கிளி அக்கா, தருமண்ணா, வாணி, பாபு மற்றும்
உறவுகளுக்கு எப்படி என்னால் ஆறுதல் கூற முடியும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிராத்திக்கின்றேன்.

பேராசிரியர்
**எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவின் நீங்காத நினைவுகள்

அக்கா என் கைகள் நடுங்குகின்றன, கண்ணீர் சொரிகின்றன,
நெஞ்சு வலிக்கின்றன, நினைவுகள் மீண்டு வருகின்றன,
எங்கள் வீட்டில் மூத்த மகள் நீங்கள் தானே அக்கா.
எங்கள் வீட்டில் கடைசி மகன் நான்தானே அக்கா
கடைசிப் பிள்ளையாக பிறந்தும் பெரும் கவலை அக்கா

பப்பாவை இழந்தேன், அம்மாவை இழந்தேன்,
பெரியண்ணாவை இழந்தேன், சின்னண்ணாவை இழந்தேன்,
இராசண்ணாவை இழந்தேன், வளர்த்த இராஜாவை இழந்தேன்,
இன்று என் மூத்த அக்காவையும் இழந்துவிட்டேன்.
நானும், கிளி அக்காவும் இன்று கண்ணீர் சொரிகின்றோம் அக்கா.

அத்தானும் வளர் வாணியும் உங்கள் நினைவால் வாடுகின்றனர்.
வாணியின் வருகை உங்கள் ஆத்மாவை சாந்தியடையச் செய்யும் அக்கா.
மலேசியாவில் நாம் எடுத்த படம் எல்லாம் நெஞ்சையும் தொடுகிறது
நாம் எல்லோரும் பிறந்தது மலேசியாவில் வாழ்ந்தது இலங்கையில்
"கந்தலஷ்மி பவணம்" இன்று ஆட்டம் கண்டுவிட்டது அக்கா.

கரவையில் ஒன்றாயிருந்தோம் உங்கள் திருமணத் தோழனாயிருந்தேன்
கொட்டாஞ்சேனையில் ஒன்றாயிருந்தோம். வாணியும் வளர்ந்தாள் உங்களோடு
அத்தானும் நீங்களும் எம்மீது அன்பைப் பொழிந்தீர்கள் மறக்கவில்லை
நாம் விரும்பிய உணவை எமக்கெல்லாம் ஊட்டினீர்கள்
மறக்க முடியவில்லை எல்லாம் நீங்காத நினைவாகிவிட்டது

நீங்கள் திடீரென் எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்கள்
கடைசித் தம்பி உங்களின் இறுதிக் கிரிகைகளையும் செய்துவிட்டேன் அக்கா
அன்புத் தங்கை கிளி ஆற்றிவிட்டார் தனது கடமைகளை அன்றும் இன்றும்- அக்கா
அத்தானும் எம்மோடிருந்து உங்கள் நினைவுகளை மீட்கின்றார் அக்கா
உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும் அக்கா
உங்கள் ஆன்மா சாந்தியடைய
யார்க்கருவானை வேண்டுகிறோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி**

தம்பி தருமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்றவர் களிப்புறு யாழ் கரவையம்பதியில் தோன்றிய கற்பகதரு பண்டிதர் சண்முகம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஆத்துவிதச் சேர்க்கை மனோன்மணிப் போதமலர்ச் சமர்ப்பணம்.**

*1. திருவருட் சோதியாய் வெண்ணீறும் பொட்டும்*
*திருப்பொலிவுப் பார்வையும் துலங்கு - திருவில்*
*திருமதி சண்முகமனோன்மணி தெய்வத்*
*திருவருடிச் சேர்ககைச் செறிவு*

*2. சோடிழந்த அன்றிலாய் செந்நாய் புலவரின்*
*சோடியிலா வாழ்வு சலிப்புற - ஈடிலா*
*குஞ்சித பாதவருள் வீழ்ச்சிக் குறைவிலா*
*பங்சாட்ச ரப்பொலிவுச் சேர்க்கை*

*3. அண்டத் திருநட்டம் ஆக்கையில் கண்டவாறு*
*பெண்ணிற் பெருந்தகை நெற்றியில் - பெண்ணீறும்*
*கண்புருவ சக்திபீடக் குங்குமமும்*
*கண்டசித் தம்பலப் பேறு*

**சிவயோகசுவாமிகள்:-**
**1. "நீ நித்தியன் நினைக்கயல் கற்பனை நிராமயன் நினைப்பொழிந்து வாழுதி"**

**2. " ஆன்மா அழியாப் பொருள் அப்பொருளை அமித்து விட்டால்,**
**வீண் பாவனையெல்லாம் வெந்து நீறாய் போகுமெடி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய

[illegible]

[illegible]ுதப் பேரறிவுப் பேராசான்

[illegible] துணைவியாரின் துன்பப் பிரிவில்

ஊசாலாடும் வேளையில் தம்பி நடராசன்

ஊழலன்பில் இங்குற்ற உற்றார், உறவினர்கள்

பாசமாய் சேர்ந்து வந்த பாமாலை ஒன்றினை

மின்னஞ்சல் மூலமாய் சமர்ப்பித்தோம் சான்றாக

பாசஞானம் பதிஞானம் மேலோங்க பரம்பொருட் சத்தினி

பாதத் திருநோக்கில்.

நன்றி.

வணக்கம்.

**யோகசுவாமிகள்**

1. நாங்கள் எல்லாம் சிவபெருமான் என்ற நூலிற் சேர்க்கப்பட் பல நிற மணிகள் ஒப்போம் நூல் அறுவதுமில்லை நாம் சிதறிப்போவதுமில்லை

2 சாப்பாடு முடிந்த பின் எச்சில் வாழை இலையை எறியத்தானே வேண்டும் (அவ்வாறே யாக்கை)

.3. ஐம் பூதங்களால் ஆக்கப்பட்ட தேகம், அதிலையே கரையவிடுவது தானே!

ஓம் சாந்தி ஓம் சாந்தி

**Dr.T.நடராஜா**

**லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பெண்ணாசி பேரா சிரியருடன் ஒன்றிணைந்து
விண்ணவர் வாழ்த்தவே வண்டமிழ் - தண்ணமுத
எண்ணெழுத்து கற்பித்து சிவாகமப் பாடியவர்கள்
நுண்சுவையாய் ஊட்டிய சீர்

5. சிந்தை நிறை பேரருட்பே றேபொருளாய்
இந்துமதி வாழ்வமைத்து இன்புருவில் - சிந்தைசேர்
வித்தக வார்கழலே பேரொளி வாழ்க்கையின்
சித்சத் தானந்தப்பேறு

6. கங்கைவார் நெஞ்சடையார் சேவையே கண்ணாரக்
சிங்காரச் சீரோங்கு வித்தக - செங்குந்த
கந்தபு ராணக் கலாச்சார வாழ்வு கந்த
கந்தமலர் பேரருட் பொற்பு

7. கலைமகளாய் கல்விக் களஞ்சியமாய் மண்மேல்
தலைசிறந்த தண்ணெளிப் பக்தி - நிலையில்
அரனடிச் சேவை மனோன்மணியின்
பரனடிச் சேர்க்கைத் பான்மை

**உமாபதிசிவம்:-**

1. **தன்னிலைமை மண்ணுயிர்கள் சாரத்தரும் சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்**


2. **நலமிலன் நண்ணார்க்கு நண்ணனார்க்கு நல்லன்**
**சலமிலன் பெயர் சங்கரன்**

**-சிற்சுகத்தைப் பெற்றக் கடவை த.ந-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் தலைவி சண்முகம் மனோன்மணி அம்மா அவர்கள் இறைவனடி சேர்ந்த வேளையில், எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் வார்த்தை கூறிய அன்பு உள்ளங்களுக்கும், வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேறுதல் அளித்தோருக்கும், இறுதிச் சடங்கிலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம் முதலிய நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org